Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதிஹு (1889)
ஆவணிமீ 28உ
ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூகூ] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பிஹு கார்த்திகைமீ உஅஉ வெள்ளிக்கிழமை (13 DEC 1957) [இல-நகூ]

# வன்னிப் பகுதிக்கு மணி விளக்கு

## தலைசிறந்த தலம் குமாரபுரம்

(முற்றொடர் — 3)

சில காலத்தின் பின்னர் இந்த மூர்த்திக்கு வலப் பாகத்துத் திருக்கையிற் சிறு பின்னம் ஏற்பட்டதால் அதனை எடுத்து கோயிலின் வடக்கேயுள்ள தலவிருட்சமாமாகிய வன்னி மரநிழலில் ஒருசிறு கோவிலமைத்துப் பிரதிட்டை செய்து வைத்திருக்கின்றனர். குமாரபுரத்தில் பரிவார மூர்த்தியாகவிருந்த பிள்ளையார் இப்பொழுது முல்லைத்தீவுக் கணித்தாகவுள்ள கரையாம்முள்ளி வாய்க்காலில் பிரதிஷ்டை செய்யப்பட்டு குமார கணபதி என்னுந் திருநாமத்துடன் வணங்கப்பட்டு வருகின்றார் எனக் கேள்வி.

குமாரபுரத்தில் 1817 ம் ஆண்டில்42 பேரும், 1839 ம் ஆண்டில் 48 பேரும் 1881ம் ஆண்டில் 4 பேரும் 1891ம் ஆண்டு தொடக்கம் ஒருவருமே வசிக்கவில்லையென 'வன்னிக் கைநூல்' கூறுகின்றது. ஆகவே சேவலும் மயிலும் சைவ அன்பர்களும் நடமாடிய குமாரபுரம் காட்டுக்காய்ச்சலும், கரடி வெம்புலிகளும், நச்சரவமும் வாழும் கானகமாக மந்தியுமறியா மரனயில் அடுக்கமாக மாறியது.

இற்றைக்கு 70-82 ஆண்டுகட்கு முன்னர் மாவிட்டபுர ஆதீனத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ நா. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள் குமாரபுரத்தின் மகத்துவத்தை நன்குணர்ந்து முல்லைத்தீவுக்குப் போய் திரு. தம்பையா முதலியார் அவர்களின் உதவியுடன் குமாரபுரக் கோயில் இலமுற்றுக் கிடந்த இடத்தையும் அதற்கண்மையிலுள்ள நிலத்தையுஞ் சேர்த்து 53 ஏக்கர் நிலத்தை அரசாங்கத்திடமிருந்து விலைக்கு வாங்கினார்கள். இந்த முருக பக்தருக்கிருந்த தொலை நோக்கு வடமாகாணத் தமிழருக்கு இன்னும் ஏற்படவில்லையென்றுதான் சொல்ல வேண்டும். நல்ல செழிப்பான பூமி. மேலும் நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குத் தலையாரக் கும்பிட்டு, ஆடும் பரிவேல் அணிசேவல் எனப் பாடும் பணியேபணியாக்கொண்டு முருகா, கதிர்வேலா என்றே அலறி நின்று, தியானம் கைகூடி வையத்தில் வாழ் வாங்கு வாழ்வு நடாத்தற்கேற்றசூழ்நிலையைக் குமாரபுரம் அளிக்கின்றது. கோயில்இல்லாவூரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. ஆனல் இப்பொழுது குடியில்லாவூரில் குமரன் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிறன். இது குமாரபுரத்துக் குமரனின் திருவிளையாடலென்று கூறுவதன்றி, வேறு எவ்வாறு விளக்க முடியும்.

காடு கொடுத்துத் திருப்பணி வேலைகளை ஆரம்பித்தார் குமாரசாமிக்குருக்கள். அக்காலத்தில் யானைக் காட்டுக்கூடாகப் பிரயா

முதலியார்
குல சபாநாதன்

ணஞ் செய்வதென்றல் பெருங் கஷ்டம். இவ்வாறு இன்னல்கள் பலவற்றைப் புன்னகையுடன் பொறுத்துத் திருப்பணி செய்தும் அது அரை குறையாகவே கிடந்தது. அவருக்கும் உடம்பை விட்டு ஆவி பிரியும் நேரம் கிட்டி விட்டது. தன் அருமைப் புதல்வன் பரமசாமிக்குருக்களைத்தன் படுக்கைக்கருகில்அழைத்து "மகனே! என் மனத்தினை ஒரேயொரு கவலை தான் உறுத்திக்கொண்டிருக்கிறது. என் அந்தி காலத்தில் நான் சொல்வதைத் தட்டாது நடந்தாயானல் உனக்கு ஒரு குறையும் வராது. நான் இங்கிருந்து புறப்பட வேண்டிய காலம் நெருங்கிவிட்டது ஆனபடியால் நீ குமாரபுரத்துக்குப் போய் அங்கு செய்யவேண்டிய திருப்பணிகளை நிறைவேற்றிக் கும்பாபிஷேகத்தையும் செய்து நித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெறச் செய்ய வேண்டும் இதுவே என் கடைசி ஆசை. சிலா மூர்த்திகளை வைத்துப் பிரதிட்டைசெய்ய முடியாது போனல் ஒரு வேலை செய்து வைப்பேன் என்று எனக்கு இப்பொழுதே வாக்குப் பண்ணித் தந்தால் என் மனம் சாந்தி அடையும்" என்றார் தந்தை சொல் மிக்க மந்திரமில்லை யென்பதை யுணர்ந்த தனயன், பரமசாமிக் குருக்கள் தகப்பனரைப் பார்த்து, "அப்பா நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். உங்கள் உத்தரவின்படி வேற் பிரதிஷ்டையாவது செய்து நித்திய பூசைகளை நடத்தி வருவேன்" என்று கூறினர்கள். உடனே தகப்பனர் தன் மகனின் இரு கைகளையும் பிடித்துத் தன் கண்களில் ஒற்றிப் பின் மார்பில் அமர்த்தியதும் அவருடைய ஆவி பிரிந்து விட்டது. இந்நிகழ்ச்சியைக் கூறும்பொழுதே பரமசாமிக் குருக்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக ஓடியது. உத்தம புத்திரராகிய பரமசாமிக்குருக்கள் திருப்பணி முயற்சியைத் தளரவிடாமல் தம்மாலியன்ற முறையில்கோயில் திருப்பணியை நிறைவேற்றுவதிற்பட்ட துன்பங்களோ அளப்பில. எனினும் அவர் தந்தையாருக்கு அளித்த வாக்கை நிறைவேற்றுவதில் கண்ணுங் கருத்துமாயிருந்தார்.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# உலக அழிவைத் தவிர்த்துப் பெரும் நலன் பெறும் வழி

(முற்றொடர்)

மக்களிடையே உலோகாயதக் கண்ணேட்டத்திற்குச் செல்வாக்கு மிக்க இடம் கிடைத்துவிட்டதால் சமயங்களின் அடிப்படையாகிய ஆன்மீகச்சக்தி முழு ஆற்றலுடன் செயல்பட முடியாதநிலை ஏற்பட்டு விட்டதெனக் கருத வேண்டியிருக்கிறது. உலோகாயதக் கொள்கையின் பிடிப்பிலிருந்து மனிதனல் விடுபட முடியவில்லை; ஆனல் விஞ்ஞானமோ மிக வேகமாக வளர்ந்துகொண்டேயிருக்கிறது. இந்த வளர்ச்சி எல்லைகடந்து அளவுக்குமீறி இருப்பதால் ஆன்மீகச் சக்திகளின் அளப்பரும் பேராற்றலை உணரக்கூடிய அவசியம் மனிதனிக்கு ஏற்பட்டிருக்கிறது. அழிவு ஆயுதங்கள் ஏராளமாகக் கட்டுபிடிக்கப்பட்டு விட்டன. மனிதன் தன்னை அழிவிலிருந்துகாத்துக்கொள்ள வேண்டும் என்ற ஆவலின் விளைவாக வாவது ஆன்மீக நெறிக்கு அருகே வரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

சமயப் பேருண்மைகளையும் ஆன்மீக நன்னெறிகளையும் அடிப்படையாக வைத்தே புதிய சமுதாயத்தை நாம் அமைக்க முடியும். ஆன்மீகச் சக்திகள் நல்ல ஆற்றலுடன் செயல்படச் செய்ய ஊக்கமளிப்பதே இம்மகா நாட்டின் நோக்கமாய் இருக்க வேண்டும்.

இந்தியா சமயச்சார்பற்ற நாடுதான்; அதில் ஐயம் இல்லை. ஆனல் இப்படிக் கூறுவதன் பொருள், இந்திய மக்களுக்குச் சமயக் கருத்துக்களிலோ, அல்லது ஆன்மீக நெறியிலோ நம்பிக்கையில்லை என்பதாகாது. இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் அவரவர்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# சோமவாரத் திருவிழாவுடன் திருக்கேதீச்சரத் திருப்பணி

## சைவமக்களுடன் சைவமடங்கள் செய்யக்கூடிய உதவி

பரமகருணாநிதியாகிய பரமேஸ்வரன் கோயில் கொண்ட திருக்கேதீச்சரம் திருப்பணிகள் திருவருளினால்தொடர்ந்து நடைபெறுகின்றன. இவற்றைச்செய்வதற்குத் தாய் நாட்டிலிருந்து பிரதம ஸ்தபதியாரோடு உபஸ்தபதியாரும் வேறு ஆசாரியர்களும் வந்திருக்கிறார்கள். இவர்களையெல்லாம் வரவழைத்து— திருப்பணிச் சபையார் பேரூக்கத்துடன் திருப்பணி புரிகின்றனர். இவற்றிற்கெல்லாம் சைவத்தமிழர்களின் பொருளுதவியும் அவசியம் வேண்டப்படுவதாகும். ஆதலால் சைவ மக்கள் ஒவ்வொருவரும்எம்பெருமானை நினைந்துநினைந்துருகி, இத்திருப்பணிவிரைவில் முடிவுற வேண்டுமென நினைந்து தங்களால் இயன்ற பணவுதவி புரிதல் வேண்டும்.

உத்தியோகத்தர்களாய் உள்ளவர்களும் திருப்பணிக்குத் தாமேபொருள் உதவுவது மாத்திரமல்லாமல்— திருப்பணிக்கு நிதி சேகரித்துக் கொடுத்தல் வேண்டும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் பாடசாலை தாபிப்பதற்குத் தம் மாணவச் சீடர்களுடன் ஒவ்வொரு இல்லந் தோறும்

........................................

— செ. கோ. —

........................................

பிடியரிசி எடுத்துப் பாடசாலைக்கு நிதிசேகரித்தவர்களென்றால் அவர் பிறந்த நாட்டுச் சைவ மக்களாகிய நாங்கள் இத் திருப்பணியில் பங்குபற்றாது வாளாவிருத்தல் வருந்துதற்குரியதாகும். ஆதலால் நாவலர் பெருமான் அவர்கள் கேதீச்சர தலத் திருப்பணி செய்யப் பெரிதும் விரும்பினர் என்பதைத் தமிழகத்துச் சைவர்கள் எல்லோரும் உணர்ந்து திருப்பணி புரிதலிற் பங்குபற்றவேண்டும். திருப்பணிச் சபையார் சுற்றுப் பிரகாரக் கோயில்களைக் கூடியளவு விரைவாய் நிறைவேற்றத் திருவருள் வழி எதிரே வரும் தை மாதம் கும்பாபிடேகம்செய்வதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். அதுவுமல்லாமல் சுவாமி அம்பாள் கோயி

திருப்பணி செய்ய யோசித்திருக்கிறார்கள். இவையெல்லாம் ஆண்டவன் திருவருட் செயலாகும். ஆதலால் மலாய்நாட்டுத் திருப்பணிச் சபையாரும் இதில் பேரூக்கம் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இலங்கை முழுவதற்கும் திருக்கேதீச்சரம் ஒரு பொதுக் கோயிலாகும். ஒரு அருட் பதி. இவ் வருட்பதியைப் பாதுகாத்து வளர்ப்பது சைவர்கள் கடன். ஒவ்வொரு மதத்தவரும் தத்தம் மதத்தின் முக்கியமான தலங்களைப் பாதுகாப்பதுபோல ஈழத்துச் சைவர்களும் இத்தலத்தைப் பாதுகாப்பது அவர்களின் கடமையாகும்.

சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் எங்கள் சைவாதீன மடங்கள் இன்று பல சிவாலயங்களைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிடேகம் செய்து வருகிறார்கள் என்பதைப் பத்திரிகை மூலம் அறிகிறோம். அவ்வாதீனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்[குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஏவிளம்பி ஞு கார்த்திகை மீ உஅ உ வெள்ளிக்கிழமை

## நாவலர் நாட்டில்!

நற்றமிழ் வளர்த்த நாவலர் அவர்களின் நினைவு நாளிலே தமிழகத்திலே செந்தமிழின் நிலை எவ்வாறிருக்கின்றதென்பதை நினைக்க வேண்டியது அவசியமாகின்றது. இயல்பாகவே அரச வரிசை பெற்றுப் பன்னெடுங்காலம் நிலவியதமிழ் அந்நியர் ஆட்சிக் காலத்திலும் அத்தகைமையுடையதா யிருந்திருக்கவும் இப்பொழுது தாயகத்திலே தன் மதிப்பற்றதாய் அவமதிக்கப் பெற்றிருப்பதை எண்ணுமிடத்து "என் சமயத்திற்கும் தாய் மொழிக்குமே நாளெல்லாம் பாடுபடுவேன்" என்று உறுதிபூண்டிருந்த நாவலர் அவர்கள் போன்ற உண்மை வீரர்கள் இன்று இந்நாட்டிலே இல்லை என்றே கவலைப்பட வேண்டியிருக்கின்றது. அப்பெரியார் எதற்காகத் தன் வாழ்நாட்களைப் பயன்படுத்தினரோ அந்தக் குறிக்கோளை இப்பொழுதுள்ள தலைவர்கள் இலக்காக வைத்துழைக்காது வெற்றுரை பகர்வதிலும் வீண் விவாதம் தொடுப்பதிலும் காலத்தைக் கழிப்பதே இதற்குக் காரணம் எனலாம்.

சைவம் வளர்த்துத் தமிழ் பரப்பிய நாவலர்நன்னெறியின் தனிச் சிறப்பை நன்குணர்ந்து அவ்வழி ஒழுகுவோமேயானால் இந்நாட்டிலே செந்தமிழ்ச் சீர் பெருகுவது திண்ணம். சைவம் தழைத்தோங்குமென்பது சொல்லாமலே யமையும். தெய்வப் பணியாக வாழ்க்கையை நடத்திய நாவலர் அவர்கள் பொருளையும் புகழையும் கனவிலும் கருதாது உழைத்து வந்தார். இந்தச் சைவப் பண்பாடுடையவர்களே தமிழைக் காக்கவும் வளர்க்கவும் அதை அரியணையில் மறுபடியும் அமர்த்தவும் வல்லவர்கள்.

'யாழ்ப்பாணச் சமயநிலை' என்ற கட்டுரை வாயிலாகத் தமிழக மக்கள் எவ்வாறு ஒழுகுதல் வேண்டுமென்று நாவலர் அவர்கள் இடித்துரைத்திருக்கின்றாரென்பதை ஈண்டு நோக்குதல் நன்று.

"நீங்கள் உங்கள் சமயக் கடவுளாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும், உங்கள் ஆன்மாவின் இலக்கணங்களையும் ஆன்மாவைப் பந்தித்த பந்தத்தின் இலக்கணங்களையும் புண்ணிய பாவங்களையும் அவைகளின் பயன்களாகிய சுவர்க்க நரகங்களையும் சிவபெருமானை வழிபடும் முறைமையையும் அதனாலே வரும் முத்தியின் இலக்கணங்களையும் கிரமமாகப் படித்தாயினும் கேட்டாயினும் அறிகின்றீரில்லை. உங்கள் பிள்ளைகளுக்கு இவைகளைப் படிப்பிக்கின்றீர்களில்லை. உங்கள் கோயில்களிலே சிவபக்தியை வளர்ப்பதற்கு ஏதுவாகிய வேதபாராயணம் தேவார திருவாசக பாராயணம் சைவசமய பிரசங்கம் முதலிய நற்கருமங்களைச் செய்கின்றீர்களில்லை ... ... ... ..." எனச் சைவசமயிகளை விளித்துக் கேட்டார் அம் மூதறிஞர் அந்நாளிலே.

சைவசமயப் பிள்ளைகள் யாவரும் சைவப் பள்ளிக்கூடங்களிலே கல்வி கற்கின்றார்களா? என்ற ஒரு கேள்வியை மட்டும் இங்கே குறிப்பிட்டுவிட்டு நாவலர் நன்னெறி நாட்டுவதற்கு நாட்டிலே தொண்டர்கள் எழுதல் வேண்டும் என்பதைப்பற்றிப் பின்னர் கூறுவாம்.

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை விழா

மேற்படிவிழா 12 12-57ல் வண்ணை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது. முற்பகல் 10 மணியளவில் கடவுளாராதனை தேவாரமோதுதல், நாவலர் சரித்திரம் படித்தல் முதலியனவும் பகல் 1 மணிக்கு மாகேசுர பூசையும் நடைபெற்றன. இதில் பல அடியார்கள் பங்கு பற்றினர்.

பிற்பகல் மாலை ஆறரை மணியளவில் முதலியார் செ. முத்துத்தம்பி தலைமையில் மண்டபத்தில் கூட்டம் ஆரம்பமாயது. அத்தருணம் தலைவர் அவர்களால் நாவலர்காலச் சமயம்பற்றி முன்னுரை நிகழ்த்தப்பட்டது. அதன்பின் திரு. பொன். அப்புக்குட்டி அவர்கள் நாவலரின் தொண்டு என்னும்பொருள் பற்றிப் பேசுகையில் நாவலர் சைவசமயத்திற்குச் செய்த சேவைகளையும் மக்களை அவர் போதனைமூலம் திருத்திய வகைகளையும் செவ்வனே எடுத்து விளக்கிப் பேசினர். பின் திரு. செ. கோவிந்தசாமி அவர்கள் "நாவலர் துறவும், அவர் அருளிய பால பாடங்களும்" என்னும்பொருள்பற்றிப் பேசுகையில் நாவலர் துறவு பெருந்துறவு எனவும் அவர் இயற்றிய பாலபாடங்கள் நான்கு வேதத்திற்குச் சமம் என்றும் இதனைப் பண்டித மோகன் மாளவியா ஒரு தினம் ஈசான சிவாச்சாரியாரோடு பேசுகையில் வியந்து கூறினாரென்றும் பேசினர். பின் வித்துவான் பொன் முத்துக்குமாரு அவர்கள் "எங்கள் தவம்" எனும் பொருள்பற்றிப் பேசுகையில் நாவலர் சமய குரவர் வழியை நாடினவர் என்றும் அவர் எங்கள் தவமாகஅவதரித்தவரென்றும் அவர் தவத்தின் பேறாக இந்துக் கல்லூரி சைவ வித்தியா விருத்திச் சங்கம் போன்ற பாடசாலைகள் தோன்றினவென்றும் நாவலரின் சைவப்பிரகாசனம்பற்றியும் சொற்பொழிவாற்றினர். பின் சங்கீதம் நடைபெற்றது. அதன் பின் தலைவர் முடிவுரையுடனும் ஆச்சிரமச் செயலாளர் வந்தனோபசாரத்துடனும் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

## விவாகம்

மானிப்பாயைச் சேர்ந்த திரு. துரையப்பா கந்தசுவாமியவர்களுக்கும் வண்ணார்பண்ணை மேற்கு வடபகுதிஐக்கிய சங்க உதவிக் காரியாதிகாரி திரு. வெற்றிவேலு நடராசா அவர்களின் புத்திரி திருவளர் செல்வி இராசேஸ்வரிஅவர்களுக்கும் சைவமுறைப்படி மணமகளில்லத்தில் கார்த்திகைமீ உகூ உ (12-12-57) வியாழக் கிழமையிரவு 7 மணியளவில் பெருந்திரளான சுற்றமித்திரர் சமுகத்தில் திருமணம் நடைபெற்றது. திரு. து. கந்தசுவாமியவர்கள் மானிப்பாய்ப் பகிரங்க வேலைப் பகுதி மேற்பார்வையாளர் (ரவுண் ஓவசியர்) திரு. துரையப்பா அவர்களின் புத்திரராவர். இவர் இந்தியாவில் B. A. வகுப்பில் கல்விபயில்கின்றார். தம்பதிகள் சகல செல்வங்களையும் பெற்று நீடூழி வாழ்வார்களாக.

## அணிந்துரை அரங்கம்

### விவேகானந்த வெளியீடுகள்

அழகிய படத்துடன் பொருத்தமான திருக்குறட் பாக்களும் பொது வாழ்க்கையில் வேண்டப்படும் குறிப்புக்களு மடங்கியவையாய் யாழ்ப்பாணம் விவேகானந்த அச்சகத்தார் வெளியிட்ட திகதி வெளியீடும் குறிப்புக் கைப் புத்தகமும் வரப்பெற்றோம். அவை வழக்கம்போற் சிறப்பாயமைந்துள்ளன.

# உங்கள் நக்ஷத்திரம்?

**எங்கள் சோதிடம்**

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 15—12—57 —— 22—12—57. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

தேகசுகம் இந்தவாரம் அதிகம் நல்லாயிருக்க மாட்டாது. கண் நோய்களுக்கிடமுண்டு. சிறு அபாயங்களுககும் அறிகுறிகளிருக்கின்றன. பணத்துறையில் நல்லவாரம். குடும்பச் சூழலிற் பிழை எண்ணங்களுக்கிடமுண்டு. புதன் இரவு வியாழம் வெள்ளி கவனமாய்க் கழிக்கவும்'

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,**

உம்முடைய எல்லாக் கருமங்களிலும் நீர் இந்தவாரம் கவனமாயிருக்கவேண்டும், நண்பரே உமக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வர், குடும்பக் குழப்பங்களுக்கு மிடமுண்டு. கந்தோர் நிலைமைகளும் சிறிதும் நல்லாயிருக்கமாட்டா. வாரத்தின் கடைசி நாளைக் கவனமாய்க் கழிக்கவும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.**

உம்முடைய எல்லா இடைஞ்சல்களையும் நீர் இந்தவாரம் நீக்கக்கூடியதா யிருக்கும். தனலாபங்களும் மேலதிகாரிகளிட மிருந்து உதவிகளும் நிச்சயம். நண்பர் உமக்கு அதிக உதவி செய்வர், உம்முடைய முயற்சிகளை முன்னேற்றுக.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.**

தேகசுகம் அதிகம்நல்லாயிருக்க மாட்டாது. அதிக கண்டனங்களை நீர் இந்தவாரம் முன்னிடுவீர். பண நெருக்கடிகளுக்கும் கந்தோரில் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்.**

இரகசியப் பகைவர் மூலம் தொந்தரவுகளுக்கும் நண்பர்களுடன் பிழை எண்ணங்களுக்கும் இந்தவாரம் இடமுண்டு. உமக்கு மனச்சமாதானமிருக்கமாட்டாது. மேலதிகாரிகளுடனும் இனத்தவர்களுடனும் சண்டைகளுக்கும் இடமுண்டு. உம்முடைய துன்பங்களுட் பலவற்றுக்குப் பெண் [illegible] காரணமாயிருப்பார்.

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

ஒரு நல்ல வாரம். உம்முடைய பணநிலைமைகள் திருந்தும். நண்பர் விசேடமாய்ப் பெண்ணன நண்பர் அதிக உதவியாயிருப்பர் உம்மோடு போட்டியிடுவோரை வெல்லக்கூடியதாயிருக்கும். புதுமுயற்சிகள் நல்ல பலனைத் தரும்.

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

எந்த ஒரு விசேட கருமத்திலும் தீர்மானஞ் செய்யமுடியாது நீர் இந்தவாரம் வருத்தப்படுவீர். உமக்கு மனச் சமாதானமிருக்கமாட்டாது. இடைஞ்சல்களி லிருந்து நீங்க நண்பர் உமக்கு உதவி செய்வர். வார இறுதியில் குடும்பத் தொந்தரவுகளுக்கிடமுண்டு.

**விருட்சிகராசி விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.**

செலவதிகரிக்கும். உம்முடைய எல்லாக் கருமங்களிலும் கவனமாயிராவிட்டால்நீர் பழிமொழிக்காளாக்கப்படுவீர். இனத்தவர்களுடன் சண்டைகளுக்கும் இடமுண்டு. தேகசுகம் விசேட கவனம் கொடுக்கப்படவேண்டும்,

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

சில சுகவீனங்களுண்டாவதற்கிடமிருக்கின்றது. கண் நோய்களுக்கிடமுண்டு. பணத் துறையில் நல்ல வாரம். உம்முடைய உத்தியோக கருமங்களில் நீர் இடைஞ்சல்களி லிருந்து நீங்கக் கூடியதாயிருக்கும். பகைவர் அழிவுக்கும் இடமுண்டு.

**மகாராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,**

பணத்துறையில் நல்ல வாரம். வழக்கத்திலும் பார்க்க வேலை கூடுதலாயிருக்கும். உம்முடைய நண்பர்மூலம் அதிக இலாபமடைவீர். காணிகள்மூலம் இலாபங்களுக்கும் இடமுண்டு.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

வாரத்தின் முதல் இரு நாட்களும் தொந்தரவானவையா யிருக்கும். அவை தவிர நல்ல வாரம். வாரமிகுதி புதுக் கருமங்களுக்கு நல்லவையாயிருக்கும். காணிகள் காணிப்பொருள்கள் மூலம் இலாபங்களும் நிச்சயம்,

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

ஒரு தளப்பமான வாரம். திங்கள் பிற்பகல் செவ்வாய் புதன் தொந்தரவானவையாயிருக்கும், வாரமிகுதி ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும், ஆனல் மனச் சமாதானமிருக்கமாட்டாது. எதிரில் வரும் சிறிது காலத்துக்கு ஒன்றையும் புதியதாய்த் தொடங்கவேண்டாம்,

ஆங்கில, தமிழ், இந்துசாதன சந்தாதாரர்களுககு

**ஒரு அரிய சந்தர்ப்பம்**

இந்த வாரபலன் கணிக்கும் ஸ்ரீ ராதாகிருஷ்ணன் அவர்கள் எங்கள் சந்தாதாரர்களுக்கு மட்டும குறைத்த விகிதமான ரூபா மூன்றுககு கிரகநிலை, நவாம்சம், மகா தெசை விபரம் அடங்கிய குறிப்புடன் 1958-ம ஆண்டுக்கு உள்ள வருஷ பலனை சித்திரவாரியாக எழுதி அனுப்புவார். இந்தவருஷம் டிசெம்பர் 31-ந் உ மட்டுமே இக் குறைந்த விகிதம் விருமபியவர்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு மூன்று ரூபாவுடன் பிறந்தவருஷம, மாதம், திகதி, நேரம், பெயர், பிறந்த இடம் என்னும் விபரத்துடன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும். பிறந்த ஊர் இலங்கைக்கு வெளி நாடாயின் இன்னும் ஒருரூபா கூட அனுப்ப வேண்டும். தயவு செய்து போஸ்டல் ஆடர்களை நாச்சிமார் கோவிலடி தபாற்கந்தோரில் பெறக்கூடியதாக அனுப்பும்.

(Postal orders to be made Payable at Nachimar kovilady Post office.

MANAGCR

S. Radhakrishnan
"Sripaty"
Nachimar Covil Rd
Vannnarponnai East Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்க்கும்
ஆசிரிய மாணவர்க்கும் உரிய
அரிய நூல்!
**படிப்பிக்கும் முறை களும் விதிகளும்**

சைவத் திருவாளர்
சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
B. A, அவர்கள் இயற்றியது
புதுக்கிய இரண்டாம்பதிப்பு.
விலை: ரூபா 3-00
அதிபர்
"இந்துசாதனம்"
யாழ்ப்பாணம்.

இந்துசாதனக் கல்விக் கதிர்
இல. 5
சைவசமயம், கல்வி
இலக்கியம், கணித விஞ்ஞானம்
இந்துசாதன இளைஞர் பகுதியாகப்
பட்சந்தோறும் வெளிவருவது

முத்திசாதன முறை
இது
கர்மயோகம், பக்தியோகம்,
இராஜயோகம், ஞானயோகம்
என்பனவற்றைத்
தெளிவாக விளக்குவது
20 அத்தியாயம்,
264 பக்கம்.
விலை ரூபா 1/=
அதிபர்:
"இந்துசாதனம்"
யாழ்ப்பாணம்.

# பழையபுலவர்களின் பாநயம்

———0———

## முருகேச பண்டிதரின் மொழி நுட்பம்

இலக்கணக் கொட்டர் எனப்படும் முருகேச பண்டிதரின் நடுவெழுத்தலங்காரப்பாவை விளக்குமுன், அவர் வரலாற்றையும் சிறிது ஞாபகப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

இவர் யாழ்ப்பாணத்துச் சுன்னகம் என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர், வேளாள குலத்தவர். உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர், நீர்வேலி சங்கர பண்டிதர் ஆகியவர்களிடம் இலக்கணம், இலக்கியம், சமயம் என்பவற்றை நன்கு கற்றவர். இவர் இலக்கணத்தில் வல்லுநராதலால், இலக்கணக் கொட்டர் என அழைக்கப்படுவார். இவர் யாழ்ப்பாணம், சிதம்பரம் சென்னை, கும்பகோணம், திருப்பற்றூர் முதலிய இடங்களில் ஆசிரியராகக் கடமையாற்றியவர். இவரிடம் யாழ்ப்பாணத்திற் கல்வி பயின்ற மாணவர்கள் எவ்வெவ்விடங்களைச் சார்ந்தவர் என்பதை இவரது மாணக்கராகிய சுன்னகம் குமாரசுவாமிப் புலவர் இயற்றிய ஒரு செய்யுள் தெளிவுபடுத்தும். அஃது,

சுன்னைநகர் புன்னைநகர்
சொல்லரிய தென்கோவைநகர்
மன்னுசிறுப் பிட்டியள
வெட்டியொடு மல்லாகந்
துன்னரிய கல்வளைமுதலாந்
தென்னகர்வாழ் மாணவர்க்கும்
பன்னுதமிழ் சொன்னவன்மன்
முருகேச பண்டிதனே.

என்பதாம்.

இவர் மயிலணிச் சிலேடை வெண்பா, ஊஞ்சல், பதிகம், சந்திரசேகர விநாயகரூஞ்சல், குடந்தை வெண்பா, நீதிநூறு, பதார்த்த தீபிகை முதலிய நூல்களை இயற்றியுள்ளார். வேறு தனிக் கவிகளும் இயற்றியுள்ளார்.

இனி, யாம் நடுவெழுத்தலங்காரம் அமைந்த செய்யுளை விளக்குவாம்.

மைந்தன்விதை மாமிகவர்
வழிமீனென்று
மதனவேள் புறவிதழிவ்
வேழின்மீது
வந்தநடு வெழுத்தெனக்குச்
செய்தான் மற்றை
வரிகள் பதினன்கினையும்
தானே கொண்டான்
அந்தநாள் வளைத்துச்சி
தரித்து தம்மை
அருச்சிக்கு மவர்க்ககற்றி
யங்கை யேந்தி
முந்த அதன் கீழிருந்து
நடனஞ் செய்து
முனிந்துரித்தான் மயிலணி
[வாழ்
முதல்வன் ருளே.

என்பது செய்யுள் இதில் முதலிரண்டு அடிகளையும் எடுத்துக்கொள்ளுவோம். மைந்தன்-மதலை. விதை - வித்து. மாமி - மாதுலை. கவர் - கவலை மீன் ஒன்று-ஆரால். மதனவேள்-காமன். புறவிதழ் - புல்லி என்று எடுத்துக் கொள்வோம். இவற்றின் நடுவெழுத்துக்கள்சேர "தத்து வராமல்"என்ருகும். எனவே சுன்னகம் மயிலணிவாழ் முதல்வன், எனக்குத் தத்து வராமற் செய்தானெனப்பொருள் படும்.

அடுத்து ஈற்றடியிரண்டையும் நோக்குவாம். வரிகள் பதினன்கு என்றது, மேற்காட்டிய மும்மூன்றெழுத்துக்களாலான ஏழு சொற்களின் நடுவெழுத்துக்கள் ஒழிய எழுத்துக்கள் பதினன்கினையும், நடு எழுத்துக்கள் ஒழிந்த எழுத்துக்கள் பதினன்கினையும், நடு எழுத்துக்கள் ஒழிய அச்சொற்கள் மலை, விது, மாலை, கலை, ஆல், கான், புலி என்ருகும். ஆதலின், அந்தநாள் - மலைவளைத்து எனவும், விது உச்சி தரித்து எனவும், தம்மை அருச்சிக்குமவர்க்கு மாலையகற்றி எனவும் கலை அங்கை யேந்தி யெனவும், ஆலின்கீழ் இருந்து எனவும், கானில் நடனஞ் செய்து எனவும், புலியை முனிந்து உரித்தான் எனவும் கொண்டுகூட்டிப் பொருள் காண்க.

மலை என்பது [illegible]யை. சிவபெருமான் மேருவை வில்லாக வளைத்தார் என்பது பிரசித்தம். விது என்பது சந்திரன். மால் என்பது மயக்கம். கலை என்பது மானை. ஆல் என்பது கல்லாலை. கல்லாலின் கீழிருந்து சிவன் ஜனகர் முதலிய நால்வர்க்கும் அறமுரைத்தான் என்பது சரித்திரம். கான்-காடு-சுடுகாடு. சிவன் சுடலை ஆடி என்பது யாவரும் அறிந்தது. தாருகாவனத்து இருடிகள் வேள்வி செய்து தோற்றுவித்துத் தம்மைக் கொல்லும்படி ஏவ வந்த புலியின் தோலைச் சிவன் உரித்து அரையிற்றரித்தான் என்பது புராண வரலாறு.


இச்செய்யுள் முருகேச பண்டிதரின் அறிவுத்திறனையும், இலக்கண இலக்கிய வன்மையையும், மதி நுட்பத்தையும் புலப்படுத்துகிறதென்பது வெள்ளிடைமலை.

திரு. த. கதிரவேலு

(— மயிலிட்டி தெற்கு —)

**அச்சுப் பிழை திருத்தம்**

இந்துசாதனம் 6-12-57 ஆறுமுக நாவலர் நினைவு 3-ஆம் பந்தி "எள்ளப் பலப்பலவாம்" என்பதை "என்னப்பலப்ப லவாம்" எனத் திருத்துக.



# கல்வி விளக்கம்

கல்வி அமைச்சரின் குன்ரு ஊக்கத்தின் பயனுகை, புத்த சமயத்தையும் சிங்களத்தையுமே வளர்ச்சியுறச் செய்யும் சிறப்பு நோக்கம் கொண்ட இரு பெரும் பல்கலைக் கழகங்கள் விரைவில் நிறுவப்படும் என அறிகின்ரேம். சிங்கள மொழியானது உலகத்து உரைசான்ற மொழிகளுள் ஒன்று அன்று என்பது உலகம் அறிந்ததே. இப்பெற்றிவாய்ந்த மொழியினையும், இறைஉணர்வில்லாத புத்தத்தையும் வளர்ப்பதற்குப் பல்கலைக் கழகங்களை நிறுவவேண்டும் என்று கங்கணங் கட்டிக் கொண்டு நிற்கின்றது சிங்கள உலகம்.

தமிழ்ப் பல்கலைக் கழகம் கனவோ? நனவோ? அறியேம். நனவாகுமாறு இறைவன் அருள்புரிக.

தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று விரைவில் நிறுவப்படவேண்டும் என்னும் எண்ணம் இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் உள்ளத்தில் ஊற்றெடுத்துள்ளது.

உணர்ச்சி அளவிலும் உரையளவிலும் நிகழும் காலத்தை நீடிக்க விடாது, விரைவிலே செயன்முறைக்குக்கொண்டுவருதல் வேண்டியதாகும். அரசியற் கருத்துக்களும கட்சிகளும் ஒருபாலாக, தமிழ் மக்கள் தமிழ் வளர்ச்சிக்குரிய தொண்டில் ஒற்றுமையாக ஈடுபட்டு உழைத்தல் வேண்டும்.

'நன்றே செய்யவும்
வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும்
[வேண்டும்'

———

# தமிழ்த் தாயே! கலங்காதே!!

———:0:———

தமிழர்கள் உன்மைந்தர் தமிழரென்று
தருக்கொண்டு நிற்பதற்கும் தகுதியற்ருேர்
அமிழ்தத்திற் சுவைமிக்க உன்னை அன்ஞர்
அன்னையாய்ப் பெற்றும்அதன் அருமைஎண்ணுர்
தேன்றமிழ் தெவிட்டாத தென்றற்றமிழ்
தேமதுரத்தமிழ் கவிவளங்கள் திரண்டதமிழ்
தானேயாய்த் தனித்தியங்கும் தன்மைபெற்றும்,
தலைநிமிர்ந்து நிற்பதற்குந் தயங்குகின்ருய்.

வீட்டிற்கோர் நூல்நிலையம் அமைத்து அங்கு
இனியதமிழ் நூல்கள்பல அடுக்கவேண்டும்
நாட்டினிலே தமிழ்ச்சங்கம் ஒன்று வைத்துத்
தமிழினது பெருமையினைப் பரப்பவேண்டும்
ஆங்கிலநூல் பலவற்றை மொழிபெயர்ப்போம்
அழகான சிறுகதைகள் மிகத்தொடுப்போம்
ஈங்கிவைபோல் தமிழ்மொழியை வளர்க்காவிட்டால்
இன்தமிழே நீ நிமிர்ந்து நடப்ப தெப்போ?

வானமதில் மின்னுகின்ற உடுக்கூட்டப்நடுவே
வளர்மதிபோல் ஒளிசெய்து விளங்கிவந்ததமிழே
மானமிலா உன்மைந்தர் செயல்களாலே
வலியிழந்து ஒளியிழந்து வருந்துகின்ருய்
ஆங்கிலத்தின் மோகத்தில் அறிவைவிற்று
அளவிறந்தோர் உன்பெருமை மறந்துவிட்டார்
[illegible]லுயர் மக்கள்சிலர் பார்த்திருந்து
[illegible]ன்றுர் துடிக்கின்றுர் வழிதான் காணுர்.

—'இந்து இளைஞன்' 1957

புத்தக விளம்பரம்

கட்டுரைக் களஞ்சியம்
விலை ரூபா 1-50

சிறுபிள்ளைப்பாடம்
விலை சதம் 40

## நாட்டுக்கு வேண்டியது நல்லறிவு

"ஒருநாட்டின் உயர்வினையும் சிறப்பினையும் அந்நாட்டின் கல்வியைக் கொண்டே அளவிடவேண்டும். அதன் அபிவிருத்திகள் அனைத்தும் மக்களின் கல்வியை அடிப்படையாகக்கொண்டனவே யாகும். இலங்கை எந்தெந்த வழிகளில் கல்வி முன்னேற்றம் அடையவேண்டுமென்பதை இதிலிருந்து கவனிக்கலாம்" இவ்வாறு கண்டி இந்து கனிஷ்ட பாடசாலை ஆண்டுப் பரிசளிப்பு விழாவிற் சொற்பெருக்காற்றிய கலாநிதி கா. குலரத்தினம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவடித் தொண்டும் சிவனடிக் கன்பும்

—o—

"உனக்கு நான் அடித்தொண்டாகி உன்னடிக் கன்புசெய்ய
எனக்குநீ தோற்றி அஞ்சேல் என்னுநாள் எந்தநாளோ
மனக்கிலே சங்கள் தீர்ந்த மாதவர்க் கிரண்டற ரேங்கும்
தனக்குநே ரில்லாவோன்றே சச்சிதா னந்தவாழ்வே".

என்று திருவாய் மலர்ந்துள்ளார் தவராசசிங்கமாகிய தாயுமான சற்குருமூர்த்தி.

பொன்னை, மாதரைப் பூமியை நாடாது வான் பார்க்கும் பைங்கூழ் போன்று திருவருள் ஒன்றையே நாடிச் சித்தந் தவறாது சிவானந்த மயமாக விளங்கிய தாயுமான சுவாமிகளே 'உனக்கு நான் அடித்தொண்டாகி உன்னடிக் கன்பு செய்ய, எனக்கு நீ தோற்றி அஞ்சேல் என்னுநாள் எந்த நாளோ!" என்று கூறியுள்ளார்கள். அரிதினும் அரிதாகிய மக்கட் பிறப்பினை எய்திய நாம் இவனுடைய திருவடிக்கு அடித்தொண்டாகி, அவனடிக்கு அன்புசெய்ய வேண்டும்.

அன்பும் சிவமும் ஒன்று: அன்பு வடிவாய் விளங்கும் இறைவனிடத்து அன்பு பாராட்டுதல்என்பது உயிர்களிடத்து அன்புடையோராய்இருத்தல். உயிர்களே நடமாடுங் கோயில்கள். "எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்; இலங்கும் உயிர் உடல் அனைத்தும் ஈசன் கோயில்' இதனை உள்ளவாறு உணர்ந்து தொண்டாற்றுவோரே சிவனடியார் ஆவர். "நான் நான்" என்னும் அகங்காரத்தின் முடிமீது ஏறி நடனம் இடும் நாம் எல்லாம் வல்ல இறைவனை ஏத்திப் போற்றுகின்றோம் என்பது சொன்மாத்திரம் என்பதுபற்றிச் சொல்லவும் வேண்டுமோ? நாம் பிறர் மெச்சுமாறு சிவபக்தி உடையவர்போன்று நடிப்பதனல் வரும் பயன் ஒன்றும் இல்லை. 'ஆசாரக் கள்வர்' ஐவரின் பாற்பட்டு உலகத்தாராற் பழிக்கப்படுவதும் அன்றி மக்கட் பிறவியின் பயனையும்இழப்பவர் ஆவேம். நாம் உள்ளபடி பிறவிக்கஞ்சி ஈசனைத் தியானித்தல் வேண்டும். தியானமே அன்பைவளர்ப்பது நம்மை இறைவனடிக்கு அன்புசெய்யப் பக்குவர் ஆக்குவது. இம்மைப் போகத்திற்குக் குறைஉண்டாயபோது அக் குறையினை ஒழித்தற்பொருட்டுக் கருணைகரர் ஆகிய கடவுளைத் தியானிக்கமுயலுகின்றோம். வேண்டுவார்வேண்டுவதை ஈந்தருளும் இறைவன் அருளால் அக்குறைகள் ஒழிந்தவிடத்தோ 'ஈசன் ஒருவன் இருக்கின்றான்' என்பதை மறந்து விடுகின்றோம்.

திருவடித் தொண்டு பூண்டு சிவனடிக்கன்பு செய்யும் ஆற்றல் எமக்கு எளிதில் வருவதொன்றன்று. அரன் அருளும் குருவருளும் வேண்டும். அரனருளாலேயே குருவருளும் வந்தெய்தும். இவற்றைப் பெறுதற்குக் கருவியாய் இருப்பது தியானம். வணக்கம். "அவனருளாலே அவன் றாள் வணங்

"கண்ணன்"

கி"த்திருவடித் தொண்டு பூண்டு சிவனடிக்கு அன்பு செய்பவர்க்கே இறைவன் குருவடிவாகத் தோற்றி "அஞ்சேல்" என்று அருள் செய்வன்.

மனம், வாக்கு, காயம் (நினைவு, சொல், செயல்) என்னும் திரிகரணசுத்தி உடையோராய், உண்மைத் தொண்டும் உண்மை அன்பும் உடையோராய், வாழ்வதற்குக் கருவியாய் இருப்பது குருவருள். சைவ வாழ்க்கைக்கு - புனித வாழ்க்கைக்கு அடிகோலுவது குருவருள். இதுபற்றியே சைவ வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாய எட்டனுள் முதற்கண்ணதாகச் சொல்லப்பட்டது குருவருள் ஆகும்.

"குருவருளும் வெண்ணீறெழுத்தைந்துங் கோயில், அரனுருவும் என்றலைமேல் ஆக்கும்—திருவடியும், சிட்டான அர்ச்சனையும் தொண்டும் சிவாலயர்க்கென், றிட்டார் அகத்தியனார் எட்டு" என்பதனால் அறியலாகும்.

குருவருள் பெறுதற்கு இறையருள் வேண்டியதாகும்; குருவருள் நிலைநிற்பதற்குக் குருபக்தி இன்றியமையாததாகும். உலகிலே தோன்றி விளங்கிய பெரியார் யாவரும் குன்றாக் குருபக்தி உடையவராய் வாழ்ந்தபடியாற்றான் உயர் நிலை எய்தித் 'தொண்டும் அன்பும் புரிவாராயினர். 'குருநிந்தை பஞ்சமா பாதகங்களுள் ஒன்றாகக் கொள்ளப் படுமாற்றால், குருபக்தியின் சிறப்பு விளங்குகின்றது.

இருமுதுகுரவராம் பெற்றோரையும், நன்னெறி நல்கிய குரவரையும் போற்றும் வாழ்க்கையினை உடையோர் இறையருள் பெற்றுத் தொண்டாற்றி அன்புநெறி நின்று மக்கட் பிறப்பின் பயன் எய்துவர் என்பது திண்ணம்.

—o—

## தமிழ் மொழிக்கு அரசவரிசை அளிக்க வேண்டும்

இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கங்களின் கூட்டு மகாநாட்டிற் (நாவலப்பிட்டியில் இம் மாதம் 14, 15ம் நாட்களில் நடைபெறவிருக்கின்றது) கொண்டுவரப்படவிருக்கும் ஒரு பிரேரணை பின்வருமாறு:-

அரசாங்கம் மொழிப் பிரச்னையில் அனுஷ்டிக்கும் கொள்கையை இம் மகாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன் தமிழ் மொழியும் உடனே அரசாங்கப் பாஷையாக்கப்பட வேண்டுமென இம்மகாநாடு கோருகிறது.

## கல்விப் பகுதிக்கு கூட்டு ஆலோசனைச் சபைகள்

கல்விஅமைச்சுக்கும் கல்விப் பகுதிக்கும், தேர்வுப் பகுதிக்கும் தொழிற் கிளைக் கல்விப் பகுதிக்குமாக நான்கு கூட்டு ஆலோசனைச் சபைகள் புதிதாக நிறுவப்பெற்றிருக்கின்றன.

கல்விப் பகுதிக் கூட்டுச் சபையிலே அகில இலங்கை ஆசிரியர்கள் சங்கத் தலைவர் திரு. A. S. கனகரத்தினம் அவர்கள் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி) இடம் பெற்றிருக்கின்றார்.

## நாவலர் பா நயம்

(நாவன்மை படைத்த நாவலர் நற்றகையாரின் பாவன்மையை உற்றுணர்வதற்கு உதாரணமாக அன்னார் இயற்றிய பாட்டு ஒன்று இங்கே தரப்படுகின்றது.)

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்கள் நீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமலிவுப் பிரானார் தந்த
வார்பூத்த அறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

# நற்றமிழ் நாவலர் நயஞ்சொல் நாற்கவிகள்

### வெண்பா

இறைவன் குறுமுனிக்கன் றின்றமிழைச் சொன்னான்
முறையே முழுதுணர்ந்து முன்னாள் — நிறைமதிநேர்
ஆறுமுக நாவலன் அள்ளமுதா யாற்றிடவெக்
காறுநிலை நின்றமொழி காண்.

### ஆசிரிய விருத்தம்

கனைகட லுலவு நாவாய் கலங்கரை விளக்கங் கண்டால்
அலையது, செறிந்த ஞான அறிவினை யடைய நாடி
அனைமொழி யாகு மத்தி அலைபவர், சற்குரு நாதர்
புனைபல நூல்கள் தங்கள் புலன்பட நினைதல் தானே.

### ஆசிரியப்பா

தாய்பால் ஆர்வம் சேய்கொளல் தர்மம்
ஆன்றோர் நெறியே சான்றோர் முறையே
என்றிதை நாட்டி, குன்ற மெறிந்தவன்
அன்று குடமுனிக் கென்றும் நிலவ
உரைத்த மொழிப்பரம் பரைவந்த நாவல!
முன்னறி தெய்வம் அன்னை மொழியே
தன்னை யீன்ற மென்மொழி யதுவே
எனவகங் குழைந்து மனதிடை வழுத்தி
சீராய்ச் சிறப்பாய் ஆரா அமுதாய்
கண்மணி யாக்கருதி வண்ணமாய் வளர்த்து
அருந்திறல் யாண்டும் பெருகிடப் பேணி
பன்மொழி தம்மிலும் நன்மொழி யாக்கினை!
தெய்வத் தமிழை;
நாவல! நின்னை ஆவலாய்ப் பாடினன்.

### கலித்துறை

பாறேன் பருப்புநெய் தெங்கோ டுயர்கனிப் பல்பொருளும்
வேறே சுவைக்கினும் வீமநற் பாக வினைஞனின்பால்
மேறே வருமோ விருப்பமு தாய்போல் விளங்குதமிழ்
நூறே டியேவிருந் தாற்றினர் நாவலர் நாதனுமே.

—[illegible]

சைவபரிபாலன சபையார் வெளியிட்ட

## உபவாசகங்கள்

அரசினரால் அங்கிகரிக்கப்பட்டன

### பால கதாவாசகம்

( சித்திர விளக்கப் பதிப்பு )

ஆசிரியர்
பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை

பாலகதாவாசகம்

| | | |
|---|---|---|
| நான்காம் புத்தகம் ... | விலை சதம் | 80 |
| மூன்றாம் புத்தகம் ... | விலை சதம் | 65 |
| இரண்டாம் புத்தகம் (அச்சில்) | ,, ,, | 50 |
| இலக்கிய வாசகம் மூன்றாம் புத்தகம் | ,, | |
| (அரிச்சந்திரன் கதையும் பஞ்சதந்திரச் செய்யுளும்) ... | விலை சதம் | 65 |

— மாணக்கர் —

## கேத்திர கணிதம்

நூலாசிரியர்
திரு. வ. பொன்னையா B. A (Hons) Ph. D.

7ஆம் வகுப்புத் தொடக்கம் கல்விப் பொதுத் தகுதிப் பத்திர வகுப்பு வரைக்கும் பயன்படத் தக்கது.

கலாசாலைகளில் வழங்குதற்கு இலங்கை அரசுக் கல்வியதிகாரியின் அங்கீகாரம் பெற்றது.

இலங்கையரசுத் தன்மொழி யலுவலகத்தாரால் வெளிப்படுத்தப்பட்ட கலைச்சொற்களே இந் நூலில் எடுத்தாளப்பட்டன, 468 பக்கங் கொண்டது. விலை ரூபா 5-50.

ஏக விநியோகஸ்தர்கள் :
கொழும்பு அப்போதிக்கரிஸ் பிரசுரங்களுக்கு
வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு விநியோகஸ்தர்கள்:

விவேகானந்தஅச்சகம் - புத்தகசாலை
விவேகானந்தாக் கட்டடம்,
யாழ்ப்பாணம்.

போன் : 517 :: தந்தி: "பிறின்ரேஸ்"

M. 180 13, 20-12-57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியகால அறிவித்தல்

**யாழ்நகர் கஷ்டநிவாரண பாதுகாப்புச்சங்கம் லிமிற்றெட்**
இல: 4, கண்டிறோட், சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.
பதிவு இல. M, 110

இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் அங்கத்தவர் தேகவியோகமடைந்தமையால் அன்னவர்க்காகச் செலுத்தவேண்டிய நன்கொடைப் பணத்தைத் தேகவியோகமடைந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குட் செலுத்தி விடவும், தவறின் பிரமாணம் 2 (2) ன் படி உரிமையை யிழக்கவேண்டி வரும்.

| காலகதியடைந்தவர் இலக். | பெயர் | விலாசம் | திகதி |
|---|---|---|---|
| 2367 | சின்னத்தம்பி கார்த்திகேசு | கடுக்காயடிலேன் | 5-12-57 |

இங்ஙனம்
த. இராசரத்தினம்
கௌரவகாரியதரிசி, 5-12-57

M 179 13-12-57

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M B, 1719

கந்தையா விசாகப்பெருமாள்
வண்ணார்பண்ணை மேற்கு
வழக்காளி

எதிராக

மொகமேட் கனி சூல்த்தான் அப்துல்காடர்
வண்ணார்பண்ணை மேற்கு
யாழ்ப்பாணம்.

எதிராளி

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டின் MB 1719ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1958 ஞூ தை மீ 25 உ சனிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். முதலும் வட்டியும் ரூபா 3787-50 சதம். முதல் ரூபா 3000/- க்கும் தீர்வைத் திகதி 1-7-57 தொடக்கம் 6-9-57 மட்டும் வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 153-42 சதம் அதாவது சட்ட நிருபண செலவு ரூபா 40-70சதம். செலவு ரூபா 40-90 சதம்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 3787-50 ம் இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம் 100 க்கு 5 வீத வட்டியையும் இறுக்க வேண்டும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணை தென்மேற்கு கோவிற்பற்று யாழ்ப்பாண இறை பறயடி என்னும் காணி 1 பரப்பு 11/16 குளி பதியப்பட்ட பாகம் P. இராசரெத்தினம் சேவயர் 1928 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 16 ம் திகதி கீறிய பட இலக்கம் 172, 2ம் துண்டின் படி வீடும் கிணறும் மற்றும் அதற்கு உரியதும். எல்லை கிழக்கு மொகமேட் மீரான்கண்டு மீருலேப்பி மரிகார். ஒழுங்கையும். எல்லை வடக்கு றோட்டு. எல்லை மேற்குப்பாக இலக்கம் 1 எல்லை தெற்கு காலஞ் சென்ற மாடர் நியானபிள்ளை மொகமேட் காசிம்மும் பங்காளரின் ஆதனமும். இதில் 13 பரப்பு 59/64 குளி பிறிக்கப்படாதது. காணி D 217/241 நம்பரில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இ கனகரெத்தினம்,
Commissioner of Sales.
5-12-57.

R. Kanagaratnam
No. 35 Colombogam Rd.
Chundikuli
Jaffna
M, 182 13-12-57

### விளம்பரம்

மூளாய்க் கூட்டுறவு வைத்திய சாலைச்சங்கத்தின் 22ம் வருடாந்தக்கூட்டம் வரும் ஜனவரிமாதத்தில் வைக்கப்படும் அங்கத்தவர் யாரும் ஏதும் பிரேரணை அக்கூட்டத்திற் பிரேரிக்க விரும்பினுல் அதை எழுத்துமூலம் காரியதரிசிக்கு டிசெம்பர் மாதம் 20-ம் திகதி அல்லது அதற்கு முன் சேரக்கூடியதாய் அனுப்பவேண்டியது. அது பிரேரணை மாதிரியாய் சாதாரணமாய் யாரும் விளங்கிக் கொள்ளக்கூடியதாய்த் தமிழ்ப் பாஷையில் எழுதப்பட்டு, பிரேரிப்பவராலும் அனுவதிப்பவராலும் கைச்சாத்திடப்பட்டு இருத்தல் வேண்டும்,

R. K. அருளம்பலம்,
காரியதரிசி,
5-12-57.
M 181 13-12-


## கோட்டை அடையாள
### இரட்டைப் பீலி
# வீட்டு ஓடுகள்

### திறமானதிலும் திறமானது

உறுதிக்கும் நம்பிக்கைக்கும் ஒப்பில்லாதது. பெருமழையில் மிகச்சிறிய அளவுநீரை உறிஞ்சுகின்றது. மழை காலத்தில் தண்ணீர் சிறிதாயினும் ஒழுகமாட்டாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதை உபயோகிக்கும் பெருந்தொகையினரின் அபிப்பிராயத்தைக் கேட்டறிக,

நீண்டகால உபயோகத்தில்
திறமானபொருளே மலிவானதாகும்

**வில்லியம் மேதர் சன்ஸ்**
**சோல் ஏஜன்ஸ் யாழ்ப்பாணம்**


### உலக அழிவைத் தவிர்த்துப் ... ...

1-ம் பக்கத் தொடர்ச்சி

விரும்பும் சமயத்தைச் சுதந்திரமாகக் கடைப்பிடிக்கலாம்; பிரசாரம் செய்யலாம். அதுதான் பொருள். இந்தியாவிலுள்ள சமயங்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இந்நாட்டில் இருந்து வருபவை. நாட்டிலுள்ள எல்லாச் சமயங்களுக்கும் அரசு உரிய மதிப்புக் காட்டவேண்டும்; சமய விவகாரங்களில் மக்கள் சகிப்பு உணர்ச்சியைக் கடைப்பிடிக்கவேண்டும். தெல்கி மாநகரில் நடந்த உலக சமயங்களின் மகாநாட்டில் கலாநிதி இராதாகிருஷ்ணன் அவர்கள் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1532
நெல்லிநாதர் காசிநாதர்
புத்தூர் கிழக்கு

வழக்காளி

எதிராக

சின்னப்பு பெரியதம்பி
புத்தூர் தெற்கு --எதிராளி

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டின் M B 1532ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணி 1958 ஞூ தை மீ 4ம் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். முதலும் வட்டியும் ரூபா 1890/- முதல் ரூபா 1500-க்கும் தீர்வைத் திகதி 7-3-57 தொடக்கம் 16-7-57 மட்டும் வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 184-06 சதம், அதாவது செலவளித்த செலவு ரூபா 123-54 சட்ட நிருபன செலவு ரூபா 31-07 செலவு ரூபா 29-45.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 1890 ம் இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம் 100-க்கு 5 வீத வட்டியையும் இறுக்க வேண்டும்.

காணி விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் கிழக்கு டிவிசன். கோவிற்பற்று புத்தூர் வடக்கு "வேம்பப்புலம்" என்னும் காணி 99 பரப்பும் வீடும் கிணறும் மற்றும் செய்பயிர்வகைகளும் இதில் பிரிக்கப்படாத 1/8 பங்கு, எல்லை கிழக்கு கிராமத்தின் எல்லையும் புத்தூர் தெற்கில் இருக்கும் வேலநாதர் காசிநாதரும் மற்றவைகளின் ஆதனமும் எல்லை வடக்கு ஒழுங்கை மேற்கு ஒழுங்கையும் புத்தூர் தெற்குக் கிராமத்தில் எல்லையும்,

(2) புத்தூர் தெற்கில் "பெருமான் வயல்" என்னும் காணி $22\frac{1}{2}$ இதில் அரைவாசி. எல்லை கிழக்கு வன்னித்தம்பி அப்புக்குட்டியும் மற்றவர்களின் ஆதனமும் வடக்கு மழவராயர் கந்தையாவின் ஆதனமும் மேற்கு விசுவலிங்கம் சரவணமுத்துவின் ஆதனமும். தெற்கு தம்பையா முத்துச்சாமியும் மற்றவர்களின் ஆதனம்.

இ. கனகரெத்தினம்
Commissioner of Salse
25—11—57

R. Kanagaratnam
No. 35 Colombogam Rd,
Chundikuli
Jaffna
M 183 13-12-57,


பாடசாலைகளுக்குரிய
## தினவரவுஇடாப்பு
அழகாக அச்சிடப்பட்டுள்ளது
**விலை ரூபா 1-50**
அதிபர்
இந்துசாதனம்


### கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

தெல்லிப்பளை மேற்கு சிவகாமிப்பிள்ளை ஆறுமுகம் தம்புவின் கைம்பெண் - வழக்காளி
வழக்கு இல M, B. 1581

எதிராக

மாவிட்டபுரம் வேலுப்பிள்ளை கந்தையா எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B, 1581-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1958-ம் ஞூ தை மாதம் 18-ந் திகதி (18-1-58) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா:-1420ம் 8-4-57 தொடக்கம் 25-7-57 வரைக்கும் ரூபா 1000-க்கு 9 வீத வட்டியும், அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்முக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 176-92 சதமும்.

காணியின் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் வடக்குப் பகுதி, தெல்லிப்பளை கோவிற்பற்று, மாவிட்டபுரம் இறை 'சாயுடை' (Sayudai)நிலப்பரப்பு 9 செய்பயிர் வான்பயிர்களும் கிணற்றுப்பங்குமுரியது. எல்லை கிழக்கு காசிப்பிள்ளை சின்னப்புவின் உரிமையாளரின் ஆதனம். வடக்கும் மேற்கும் தெற்கும் ஒழுங்கை.

செ. பாண்டித்துரை,
கொமிஷனர்,
(Commissioner)

மல்லாகம்
11-12-57.
M, 185 13-12-57.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB 1521
வயித்திலிங்கம் மகேசன்
பெரியகடை யாழ்ப்பாணம்
வழக்காளி.

எதிர்

காலம்சென்ற முருகேசு பொன்னையாவின் ஆதனங்களுக்கு தத்துவகாறியாகிய முருகேசு பொன்னையா கைம்பெண் வள்ளிப்பிள்ளை
கனகசபை றோட்டு,
மானிப்பாய் தெற்கு
எதிராளி,

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் MB 1521 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1958 ஞூ மாசி மீ 8ம் உ சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 2365/- 28-2-57 துவக்கம் 10-5-57 வரைக்கும் ரூபா 1500/- க்கும் ஆறு வீத வட்டியும் அதின் பின் மொத்தத் தொகைக்கும் பணம் கொடுக்கும்வரையும் ஐந்து வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 245-62.

காணி விபரம்

யாட்பாணம் சாவுகச்சேரி தெற்கில் கொட்டுக்கேணி என்னும் காணி நீ இ. $7\frac{1}{2}$ வீடும் பயிர்களும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் இதில் வடக்கு புறமாக நிந்தமாக நீ, இ. 3ம் வீடும் பயிர்களும் ம்ற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை:

கிழக்கு அரியரத்தினமும் பெண் பராசக்தியின் ஆதனமும், பங்காளரும்.

வடக்கு ஒளுங்கையும் ருமநாதன் பெண் அன்னம்மாவின் ஆதனமும்.

மேற்கு ருமநாதன் பெண் அன்னம்மாவின் ஆதனமும் மிகுதிக் காணியும்.

தெற்கு காலம்சென்ற முருகேசு பொன்னையாவின் ஆதனம்.

வ, அ. துரையப்பா
கொமிஷனர்

யாழ்ப்பாணம்
10-12-57.
M 184 13-12-

## கேள்விப் பத்திர அறிவித்தல்

———:0:———

**யாழ்ப்பாணம் மாநகர சபை**

——0—0——

பஸ் நிலையத்தை உள்ளடக்கிய காலையினதும்,
பலாலி றோட்டிலிருக்கும் சந்தையினதும் வாடகைப்பணம்
அறவிடும் உரிமைக் குத்தகைக்கான கேள்விப்பத்திரம் - 1958

கீழ்வரும் பஸ் நிலையத்தை உள்ளடக்கிய காலையினதும், பலாலி றோட்டிலிருக்கும் சந்தையினதும் வாடகைப் பணம் அறவிடும் உரிமைக் குத்தகைக்கான கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் மாநகர சபைக் கொமிஷனரால் 27-12 57 ஆம் திகதி பிற்பகல் 4-30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும், இக்கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப் பத்திரத்தில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்கு முத்திரையிடப்பட்டனவாகவும் இருக்கவேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் 27-12-57-ம் திகதி பிற்பகல் 3 மணிவரை வழங்கப்படும்.

| சந்தைகள் முதலியவற்றின் பெயர் | கேள்விப் பத்திரங்களின் விலை | கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்காகச் செலுத்தப் படவேண்டிய பொறுப்புப்பணம் | கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன் நொத்தாரிஸ் உறுதிக்காகசெலுத்த வேண்டிய கட்டணம் |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ ச. | ரூ. ச. |
| 1 பஸ் நிலையத்தை உள்ளடக்கிய காலை 1-1-58 ம் திகதி முதல் 31-3-58-ம் திகதி வரை | 10-00 | 250-00 | 150-00 |
| 2 பலாலி றோட்டிலுள்ள சந்தை 1958-ஆம் ஆண்டு முழுவதற்கும் | 2-50 | 50-00 | ——— |

இதர விபரங்களை, கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு எழுத்து மூலம் விண்ணப்பித்து அறியலாம்,

ஆ. வ. சின்னையா
மாநகரசபை கொமிஷனர்
யாழ்ப்பாணம்
- இ -

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்,
மார்கழி 11, 1957.

G 15 13-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பகுதிக்கு மணி விளக்கு

1-ம் பக்கத் தொடர்ச்சி

புராதன குமாரபுரக் கோயிலிலுள்ள சில படிகள், நிலைகள் முதலியவற்றையே உபயோகித்துக் கோயிலை இரண்டு மண்டபங்களுடன் கட்டி நிறைவேற்றி, வேற்பிரதிஷ்டை செய்ய நிச்சயித்துகும்பாபிஷேகத்துக்குத் தேவையான திரவியங்களை வாங்கி வருவதற்காக யாழ்ப்பாணத்திற்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே இந்துசாதனப் பத்திராசிரியர் பண்டிதர் ம. வே. திருஞானசம்தர் அவர்கள் கொடுத்த அறிமுகக் கடிதமூலம் மூளாய் விக்ரோறியாக் கல்லூரி அதிபராக விளங்கிய சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் கொடுத்த பண உதவி கொண்டு அருளொழுகு திருவடிவமைந்த மூர்த்திகளை வாங்கிக் கொண்டு, வேலை வைத்துப் பிரதிஷ்டை செய்யவேண்டுமெனக் கருதியிருந்த அதே தினத்தில் அதாவது 19.5-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11-த்தேதி மூர்த்திகளை மூலஸ்தானத்தில் அமைத்துக் கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி வைத்தார்கள். நல்லூர் தம்பையாக் குருக்கள் அவர்கள் கும்பாபிஷேகக் கிரியைகளைச் செய்தார்கள். கொழும்பிலுள்ள சைவஅன்பர்களின் உதவியுடன் வார்க்கப்பட்ட உற்சவமூர்த்திகள் 1942-ம் ஆண்டு ஆவணி மாதம் அமைக்கப்பெற்று, இரண்டாவது கும்பாபிஷேகம் நிறைவேறியது. "இந்தக் கோயிலை நிர்வகிப்பதற்கு ஒரு திருப்பணிச்சபை அமைத்து அதன் பொறுப்பிலே கையளித்து விட்டு என் சீவியகாலம்வரை முருகனுக்குத் தொண்டாற்றிவர ஆசைப்படுகிறேன்" என்று பிரமஸ்ரீ பரமசாமிக் குருக்கள் அவர்கள் அடிக்கடி என்னிடம் கூறியிருக்கிறார்கள். அவ்வாறே பலரிடம் முறையிட்டிருக்கிறார்கள். இவர் கொழும்புக்கு வரும்போதெல்லாம் குமாரபுரக்குமரனுடைய விபூதிப்பிரசாதம் கொண்டு வந்து அடியேனுக்குத் தருவது வழக்கம்.

இந்தக் கோயிலிலே பழைய கோயிலிலிருந்த கருங்கல் வாசற்படியாக வைக்கப்பட்டிருக்கிறது. கதவுநிலையில் ஒரு சோடி பாம்பு உலகமாகிய உருண்டையை நாக்கை நீட்டிக் கொத்தும் பாவனையில் அழகிய புடைச்சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு வன்னிக் காடுகளில் சோழர் காலத்து லிங்கம் பல மறைந்து கிடக்கின்றன என்பதற்கையமில்லை. ஸ்ரீ பரமசாமிக் குருக்கள்அவர்களே குமாரபுரத்துக் கோயில் வளவில் இடதுபக்கத்தில் முல்லைத்தீவு உண்ணாப்புலவையிலிருந்து அழகிய பழைய லிங்கம் ஒன்றை எடுத்து வந்து தாபித்துப் பூசை செய்து வருகின்றார். தரிசன மண்டப வாசலில் ஐந்தலைநாகம் உயிர்ச் சிற்பமாக அமைந்துள்ளது. இதுவும் பழைய கோயிலில் இருந்த சிற்பமாகும்.

மூலமூர்த்திகளையும் உற்சவ விக்கிரகங்களையும் தரிசித்த பின்னர் தனியூற்று ஆசிரியர் வி. நமசிவாயம் அவர்கள் வந்து சேர்ந்து தமது வீட்டுக்கு அழைத்துச் சென்று சிற்றுண்டி விருந்தளித்தார்கள். உண்மையில் அது இராப்போசனமாகவேயிருந்தது. திரு. நமசிவாயம் அவர்களும் அவர்களுடைய மனைவி மக்களும் விருந்தினரை உபசரிப்பதில் கைதேர்ந்தவர்கள். தனியூற்றில் அவர்களுடைய இல்லம் வற்றாத விருந்தூற்றாக விளங்குகின்றது. குமாரபுரத்தைத் தரிசித்த பின்னர் வற்றாப்பழை கண்ணகியம்மனையும் வணங்கிக் கொண்டு திரும்பினேம்.

குமாரபுர முருகன் ஆலயத்துக்கண்மையில் சைவ அன்பர்கள் மீண்டும் குடியேறி அந்த நகரின் பண்டைக் கீர்த்தியை மீண்டும் பரவச் செய்வது சைவ நன்மக்கள் கடமையாகும்.

# அடைவுநகை விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் பழ. சோம. கைலாசநாதன் செட்டியார் அடைவுகடையில் அடைவு வைக்கப்பட்டு தவணை தப்பி மீட்கப்படாதிருக்கும் கீழ்க் காணும் நகைகள் 23-12-57 சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| நம்பர் | உமீஞு | கொடுத்தரூபா | ஊர் | பெயர் | நகைவிபரம் |
|---|---|---|---|---|---|
| 3924 | 12-1-53 | 40 | மேலணை மேற்கு | ஆறுமுகம் குணசிங்கம் | இ. மி. வெ, கல் காதோலை சோடி 1 |
| 3978 | 22-1-53 | 260 | கந்தர்மடம் | ஆறுமுகம் சிவசோதி | இரட்டைப்பட்டு மணிமாலை 1ம் ரேடியோ வளையல் சோடி 1ம் |
| 4470 | 26-1-53 | 20 | இணுவில் | மிஸஸ் சபாபதி | இ மி. கல் மோதிரம் 1 |
| 4569 | 30-7-53 | 40 | திருநெல்வேலி கிழக்கு | வல்லி நாகலிங்கம் | கிளாவர்மோதிரம் 1 |
| 4781 | 18-9-53 | 20 | 19, ஸ்டான்லி ரோடு | P. V. தாஸ் | கிளாவர் மோதிரம் 1 |
| 5114 | 15-12-53 | 20 | இளவாலை | சூசை சேவியர் | மோதிரம் 1 |
| 5863 | 3-6-54 | 30 | கொக்குவில்மேற்கு | நவரெத்தினம்யோகரெத்தினம் | பெட்டிமோதிரம்1 |
| 6294 | 18-10-54 | 40 | வட்டுக்கோட்டை | செல்லத்துரை தருமலிங்கம் | இ மி கல் சிட்டி 1 |
| 6448 | 6-11-54 | 20 | புங்குடுதீவு | சண்முகம் சரவணமுத்து | இ மி. கல் திருகுப்பூ 1 |
| 6792 | 31-1-55 | 125 | யாழ்ப்பாணம் போலீஸ் ஸ்டேஷன் | H, M, D. W. குணதிலக பண்டா | முடிச்சுச் செயின் 1 |
| 7039 | 15-3-55 | 200 | வவுனியா | அரசன் கருப்பையா | இ மி சி கல் பதைக்கத்துடன் மூன்று குண்டு அட்டியல் 1 |
| 7267 | 25-5-55 | 120 | மானிப்பாய் வடக்கு | ஆறுமுகம் வேலுப்பிள்ளை | இ மி கல் புரூச்சு1ம் கொ. புரூச் 1ம் |
| 8303 | 19-4-56 | 50 | நவாலி தெற்கு | S. P. பேரின்பநாயகம் | நெளி வளையல் சோடி 1 |
| 8805 | 29-9-56 | 80 | நாவாந்துறை | நீக்கிலான் மரியார் | நெளிவளையல் சோடி 1 |
| 8825 | 5-10-56 | 80 | நாரந்தனை | இலங்கைநாதர் பாலசுப்பிரமணியம் | ஆயில் கல் பெண்டன் கோர்த்த செயின் 1 |
| 9031 | 14-10-56 | 120 | திருநெல்வேலிதெற்கு | குமாரவேலு வல்லிபுரம் | இமி முத்து பெண்டன்1 |
| 9093 | 14-10-56 | 45 | இணுவில் 4ம் கட்டை | வல்லிபுரம் பரமு | பளிங்குக் கல் பெண்டனுடன் செயின் 1 |

28-12-57 க்குச் சரியான ஏவிளம்பி ஹு மார்கழி மீ 13 உ சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகை புறநீங்கலாக மீதி என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. பசுபதிச்செட்டியார்
வெந்திஸ் மேஸ்தர், 3-12-57.

M. 174 6, 13-12-57.

யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்


Std 14

# சோமவாரத் திருவிழாவுடன் திருக்கேதீச்சரத் திருப்பணி

1-ம் பக்கத் தொடர்ச்சி

தாரும் சிவதொண்டு புரியும் தவ விசேடமுடைய அடியார்களாதலால் நாவலர் பெருமானின் நினைவாகத் திருக்கேதீச்சரக் கோயிலின் திருப்பணிக்குதவுதல் பொருத்தமாகுமென்று குறிப்பிட்டு அவ்வழியிற் சிந்திக்குமாறு வேண்டுகின்றோம். தவப்பெரும் செல்வர்களின் பொருளுதவியும் இத் தலத்திற்கு அவசியம் வேண்டப்படுவதாகும்.

மதுரை மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகளின் அருட்பணி இத்தலத்திற்கு இன்றும் குன்றாதிருக்கின்றது என்பதும் குறிப்பிடத் தக்கது. ஏனைய மடாதிபதிகளும் இவ்வாறு திருவருள் நோக்கம் புரிய வேண்டும். இப்போது சோமவாரவிழா ஒவ்வொரு வாரமும் நடைபெற்று வருகிறது. பாலாவியில் போதியளவு தண்ணீர் நிறைந்திருக்கிறது. மக்கள் நீராடுவதற்கும் பெரும் வசதியாய் இருக்கிறது. மடங்களில் மக்கள் தங்கிச் செல்வதற்கும் வசதியுண்டு. இங்ஙனமிருப்பதால் சைவ மக்கள் ஒவ்வொருவரும் சோமவாரத் திருவிழாவைத் தரிசித்து எம்பெருமானின் திருவருட் பிரசாதத்தைப் பெற்றுத் திருப்பணிக்குப் பொருளுதவியும் புரிந்து ஏகுவார்களாக என்று கேதீச்சரநாதர் திருவடிகளைச் சேவிக்கின்றோம்.




## ஜீ. ஸீ. ஈ. இலக்கியம்

திருவிளையாடற்புராண வசனச்சுருக்கம்

அரும்பதவுரை, செய்யுள்உரை முதலியவற்றுடன்.

விலை சதம்: 50.

மனேஜர், 'இந்துசாதனம்' யாழ்ப்பாணம்.

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 13-12-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org